### இராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய பகுதிகளில்

# பொதுமக்களைச் சந்தித்து ஆஸ்டின் எம்.எல்.ஏ. குறைகள் கேட்டறிந்தார்!

## விரைவில் தீர்வு காணப்படும் எனவும் உறுதியளித்தார் !

நாகர்கோவில், ஜூலை 17-


நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய பகுதிகளில் பொது மக்களிடம் குறைகளை கேட்ட சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆஸ்டின் அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து பேசி பொது மக்களின் குறைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும் என உறுதி அளித்தார்.



நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எஸ் ஆஸ்டின் வாரந்தோறும் மேற்கொள்ளும் மக்கள் சந்திப்பு என்ற முகாம் மூலம் பொது மக்களின் குறைகளையும் கோரிக்கைகளை ஏற்று சம்பந்தப்பட்ட துறை மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக ராஜாக்கமங்கலம் வடக்கு ஒன்றிய பகுதிகளான கணபதிபுரம் பேரூராட்சி கோவில்புரம் அழிக்கால் பிள்ளைத்தோப்பு கன்னங்குறிச்சி கீழ ஊர் நடுவூர் வெள்ளமடி சூரம்பள்ளம் ஆலங்கோட்டை உள்ளிட்ட கிராம பகுதிகளில் பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டு அறிந்தார் மேலும் பொது மக்களிடம் கோரிக்கைகளையும் பெற்றார்.

கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மூலம் விரைவில் தீர்வு காணப்படும் எனக் கூறிய அவர்.

பொதுமக்கள் பெரும்பாலும் பழுதடைந்த சாலைகள் வீடு இல்லாத ஏழை குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா பழுதடைந்த மழை நீர் ஓடைகளை சீர் செய்தல் பழுதான மின்கம்பங்களை மாற்றுதல் எரியாத மின் விளக்குகளை எரிய செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை வைத்துள்ளனர் இவைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி விரைவில் தீர்வு காணப்படும் என்றார் நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் உடன் ஒன்றிய செயலாளர் சற்குரு கண்ணன் கணபதிபுரம் பேரூராட்சி செயலாளர் பிரபா எழில் முன்னாள் பேரூராட்சி தலைவர் தாணுலிங்கம் ஒன்றிய பிரதிநிதி செல்வராஜ் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி மாவட்ட அமைப்பாளர் முருகேசன்மாவட்ட முன்னாள் கலை இலக்கிய துணை அமைப்பாளர் ரத்தினசாமி கவுன்சிலர்கள் பரமானந்தன் மேரி சுசீலா வார்டு செயலாளர்கள் செல்வன் முருகேசன் ஆகிய உள்பட கழக பொறுப்பாளர்களும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.



நெல்லை ஒருங்கிணைந்த தி.மு.க. சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு திருவுருவ சிலைக்கு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம். எல்.ஏ.கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப் பட்டது.இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பில் நெல்லை சந்திப்பில் உள்ள

# காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## இரா.ஆவுடையப்பன்- மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.- ம.கிரகாம்பெல் தலைமை !

நெல்லை, ஜூலை 17-

நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை சந்திப்பு ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் முழு திருஉருவச்சிலைக்கு நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணை மேயர் கே.ஆர். ராஜூ. மாநகர கிழக்கு பொறுப் பாளர் தினேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன்,மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட பொருளாளர் வண்ணை சேகர், மாவட்ட துணை செயலாளர்கள் தர்மன், எஸ். வி . சு ரே ஷ் . த ம ய ந் தி , மாவட்ட அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, அனித்தா,செந்தில்குமார், பகுதி செயலாளர் தச்சை சுப்பிரமணியன், மண்டல தலைவர்கள் கதீஜா இக்லாம் பாசிலா, மகேஸ்வரி, ரேவதி பிரபு, மாமன்ற உறுப்பினர்கள் உலகநாதன், கந்தன், கருப்பசாமி கோட்டையப்பன், சீதா பாலன், டாக்டர் சங்கர்,அனார்கலி,அப்துல் சுபுஹானி, தொண்டரணி துணை அமைப்பாளர் இசக்கிபாண்டியன்,ஒன்றிய செயலாளர்கள் சுபாஷ் தங்க பாண்டியன் போர்வெல் கணேசன், அருள்மணி, இளைஞரணி மணிகண்டன்,

மாவட்ட பிரதிநிதி செல்வகோபால், மாநகர வர்த்தக அணி எல்.ஐ.சி.பேச்சி முத்து, வட்ட செயலாளர்கள் பேபி கோபால், அந்தோணி, மேகை செல்வம்,கவிஞர் மூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர். தொடர்ந்து நெல்லை மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் ரவீந்தர்,சுந்தர்,

ராஜேஸ்வரி,சுப்புலட்சுமி,நித்திய பாலையா உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில் முதலமைச்சர் உத்தரவிட்ட பிறகு

# திறக்கப்பட்ட தண்ணீர் விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல்முறை!

## அணையை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம்!

திருப்பூர், ஜூலை 17 -

அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில் முதலமைச்சர் உத்தரவிட்ட பிறகு திறக்கப்பட்ட தண்ணீர் விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல் முறை, அணையை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டம் நடத்தினர்.

திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்கும் முதலமைச்சரின் உத்தரவுக்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து அமராவதி அணை முன்பு திரண்டு போராட்டம் நடத்தினர்.

உடுமலை அருகே உள்ள அமராவதி அணை 90 அடி உயரம் கொண்டது. இந்த அணையின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் சுமார் 55 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பாசனத்துக்காக பழைய ஆயக்கட்டு பகுதிக்கு ஆற்று வழியாகவும், புதிய ஆயக்கட்டு பகுதிக்கு பிரதான கால்வாய் வழியாகவும் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற அமராவதி ஆற்று மதகில் இருந்து ஜூலை 15ம் தேதி முதல் வரும் 21ம் தேதி வரை மொத்தம் 6 நாட்களுக்கு 414.72 மில்லியன் கன அடிக்கு மிகாமல் அமராவதி ஆற்றில் தண்ணீர் திறந்துவிட முதல்வர் விஜய் உத்தரவிட்டார். அதன்படி, நேற்று காலை அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்குஎதிர்ப்பு தெரிவித்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய ஆயக்கட்டு பகுதிக்கும் பிரதான கால்வாயில் 400 கனஅடி வீதம் தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

விவசாயிகள் முற்றுகையிடுவதை அறிந்து காவல் துறை துணை கண்காணிப்பாளர் தையல் நாயகி தலைமையில் போலீசார் அமராவதி அணை முன்பு குவிக்கப்பட்டனர். நீர் வளத்துறை அதிகாரிகளும் விரைந்து வந்தனர். உடுமலை வட்டாட்சியர் அருணா. காவல்துறை துணை கண்காணிப்பாளர் தையல் நாயகி, நீர்வளத் துறை செயற்பொறியாளர் சுப்ரமணி, உதவி செயற்பொறியாளர் ஆதிசிவன் ஆகியோர் விவசாய சங்க நிர்வாகிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அப்போது, விவசாயிகள் பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறக்கும் வரை இங்கிருந்து செல்ல மாட்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இங்கு வர வேண்டும் எனக்கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். உயர் அதிகாரிகளுடன் பேசி தீர்வு காணப்படும் என அதிகாரிகள் கூறியதை விவசாயிகள் ஏற்கவில்லை. இதையடுத்து, அணையில் இருந்து ஆற்று மதகில் தண்ணீர் திறப்பை அதிகாரிகள் நிறுத்தினர். தொடர்ந்து பேச்சு வார்த்தை நடந்தது. அமராவதி அணை நீர் திறப்பு வரலாற்றில், முதல்வர் உத்தரவிட்ட பிறகு திறக்கப்பட்ட தண்ணீர், விவசாயிகள் போராட்டத்தால் நிறுத்தப்படுவது இதுவே முதல்முறை என விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

தமிழ்நாடு விவசாய சங்க மடத்துக்குளம் தாலுகா செயலாளர் வீரப்பன் பேசியதாவது : -

பழைய, புதிய ஆயக்கட்டு என்பது இரு கண்கள் போன்றது. 2 தரப்பினரும் பயன்பெறும் வகையில் தண்ணீர் திறக்க வேண்டும். புதிய ஆயக்கட்டுக்கும் தண்ணீர் திறக்க வேண்டும் என்றும் நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். குடிநீர் திறப்பு எனக் கூறி ஒரு வாய்க்காலில் மட்டும் முறைகேடாக 300 கனஅடி நீர் திறந்து விட்டார்கள்.

நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு ஆயக்கட்டு பாசனத்தை பாதுகாக்கும் எண்ணம் கிடையாது. தாராபுரத்துக்கு ஏற்கனவே குடிநீருக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மடத்துக்குளம் தாலுகா பகுதியில் ஏற்கனவே உள்ள கூட்டு குடிநீர் திட்டம், தாமரைப்பாடி, குமரலிங்கம், மடத்துக்குளம், சங்கராமநல்லூர் கூட்டு குடிநீர் திட்டங்கள் தற்போது இல்லை. அதிகாரிகள் குடிநீர் தேவைக்கு என்று பொய் சொல்லி வருகிறார்கள். போராட்டத்தால் தற்போது தண்ணீர் நிறுத்தப்பட்டது. ஒரு அரசாணை வெளியிட்டு நிறுத்தப்பட்டது என்றால், இந்த அமராவதி பாசன விவசாயிகள் போராட்டத்தால் மட்டும்தான்.

அணை நீர்மட்டம் 52 அடியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, முறையான நீர் பங்கீடு வேண்டும். அது 20ம் தேதிக்குள் நடக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார். இதனிடையே பிரதான கால்வாயில் 21ம் தேதி முதல் தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என செயற்பொறியாளர் உறுதி அளித்ததை தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர். இதனால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

### சென்னையில் அதிகரிக்கும் காய்ச்சல்!

# 15 நாளில் 65 பேருக்கு டெங்கு பாதிப்பு!

## ஊழியர் பற்றாக்குறையால் மாநகராட்சி திணறல்!

சென்னை, ஜூலை 17-

சென்னையில் கடந்த 15 நாட்களில் 65 பேருக்கு டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இது, பொதுமக்களிடையே அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. கோடை முடிந்தாலும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெயிலின் தாக்கம் குறையவில்லை. பகல் நேரங்களில் கோடை வெயில் சுட்டெரிக்கிறது. மாலை நேரங்களில், அவ்வப்போது திடீரென மழை பெய்கிறது. இந்த பருவ நிலை மாற்றத்தாலும், திடீர் மழையாலும் டெங்கு காய்ச்சலை பரப்பும், 'ஏடிஸ்' கொசு உற்பத்தி அதிகரித்துள்ளது. மாநகரின் பல பகுதிகளில், திறந்தவெளி இடங்கள் குப்பை கொட்டும் இடங்களாகவும், முறையாக பராமரிக்காத இடங்களாகவும் உள்ளன. அங்கு தேங்கும் மழைநீரான நன்னீரில், 'ஏடிஸ்' வகை கொசுக்கள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கின்றன.

சில இடங்களில், சில ஆண்டுகளுக்கு முன் இடப்பட்ட முட்டை இருக்கும் பகுதியில் நன்னீர் தேங்கும் போது, அவை லார்வாக்களாக உருவாகி, கொசுவாக உற்பத்தியாகிறது. இவற்றால், 'ஏடிஸ்' வகை கொசுக்கள் அதிகரித்து, பகலிலும் மனிதர்களை கடித்து, டெங்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. டெங்கு பரவல் பருவம் பொதுவாக ஜூன் மாதத்திலேயே தொடங்கி, நவம்பர் மாதம் வரை உச்சத்தை எட்டும். இந்நிலையில், சென்னை மாநகராட்சி இதுவரை தேவையான முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதனால், கடந்த 15 நாட்களில் 65 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் பிறகுதான், வீடுகள்தோறும் கொசு மருந்து அடித்தல் மற்றும் கொசுப்புழு ஒழிப்புப் பணிகளை மாநகராட்சி தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளது. இது ஏன் முன்னரே செய்யப்படவில்லை என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தற்போதைய நில வரப்படி, சென்னை மாநகராட்சியில் கொசுப்புழு ஒழிப்புப் பணியில் 2,073 பணியாளர்கள் மட்டுமே உள்ளனர். இதன் விகிதப்படி, ஒவ்வொரு 500 வீடுகளுக்கும் ஒரே ஒரு பணியாளர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வளவு குறைந்த எண்ணிக்கையிலான பணியாளர்களைக் கொண்டு, நகரின் அனைத்துப் பகுதிகளையும் முழுமையாகக் கண்காணிப்பது சாத்தியமில்லை என பொதுமக்கள் கடும் குற்றச்சாட்டு முன்வைக்கின்றனர். இதற்கிடையே, இதுவரை பணிகள் தொடங்கப்படாத 8,000 புதிய கட்டுமான இடங்களை மாநகராட்சி ஆய்வு செய்துள்ளது.

இத்தகைய கட்டுமான தளங்களில் தேங்கியுள்ள நீர் கொசு இனப்பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக அமையக்கூடும் என்பதால், சென்னை மாநகராட்சி கொசு ஒழிப்பு பணிகளில் இறங்கியுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் மூத்த குடிமக்கள் உள்ளிட்ட பொதுமக்கள் மத்தியில், நோய் பரவல் குறித்த அச்சம் அதிகரித்து வருகிறது. போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாததால்தான் இந்த நிலைமை ஏற்பட்டதாக பலரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

மாநகராட்சி இனியேனும் தொடர்ந்து கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டு, கொசு இனப்பெருக்கத்தைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

### காளையார்கோயிலில்

# ரூபாய் 1000 லஞ்சம் வாங்கிய வட்டார விரிவாக்க அலுவலர் கைது!

சிவகங்கை, ஜூலை 17 -

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றிய அலுவலகத்தில் வட்டார சமூகநல அலுவலராக ஜெயராணி பணியாற்றி வருகிறார். இவரிடம் காளையார்கோவிலைச் சேர்ந்த சிவானந்தம் தனது இரண்டு பெண் குழந்தைக்கான அரசு நலத்திட்ட உதவிகள் ஏதும் உள்ளதா என்று கேட்டாராம். அதற்கு ஜெயராணி ரூபாய் 1000 லஞ்சமாக கொடுத்தால் இதுகுறித்து தகவல் தருகிறேன் என்று கூறியுள்ளார்.

லஞ்சம் தர விரும்பாத சிவானந்தம் சிவகங்கையில் உள்ள மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸில் புகார் செய்தார். அவர்கள் ரசாயன பவுடர் தடவிய 1000 ரூபாய் நோட்டினை சிவானந்தத்திடம் கொடுத்தனர். சிவானந்தம் ஜெயராணியிடம் ரசாயன பவுடர் தடவி ரூபாய் ஆயிரத்தை கொடுத்த பொழுது மறைந்திருந்த லஞ்ச ஒழிப்புத் துறை இன்ஸ்பெக்டர் கண்ணன், ஜேசுதாஸ் தலைமையிலான லஞ்ச ஒழிப்பு போலீசார் திருமதி ஜெயராணியை கைது செய்தனர்.

இதுகுறித்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் ஜெயராணியிடம் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், ஆற்றங்கரை ஊராட்சி கண்மாயில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் முறையான அனுமதி பெற்று வண்டல் மண் எடுப்பதற்கும், ஆழப்படுத்துவதற்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆய்வு மேற்கொண்டார்.உடன் உதவி செயற்பொறியாளர் முருகன், ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாராமன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் முனியசாமி, ஒன்றிய அவைத் தலைவர் தர்மர், மாவட்ட பிரதிநிதி ராமலிங்கம், கிளை செயலாளர் ஆதிலிங்கம் உள்ளிட்ட விவசாயிகள் உடனிருந்தனர்.



இராமேஸ்வரம் சிவகாமி நகரில் 15.7.2026,அன்று பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் 124, வது பிறந்தநாளை முன்னிட்டு, கழகத்தலைவர் தளபதியார் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர் – தமிழ்நாடு எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின் படி, நமது மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான காதர்பாட்சா முத்துராமலிங்கம் தனது சட்டமன்ற நிதியில் இருந்து உடற்பயிற்சிக் கூடம், மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு சிலம்பம் தளம் அமைத்துக் கொடுத்து, அதற்கு பெருந்தலைவர் காமராஜர் நினைவு விளையாட்டு அரங்கம் என பெயரிட்டு, மாலை அணிவித்து, துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர்–நகர் கழக செயலாளர். கே.இநாசர்கான், நகர் பொதுமக்கள், மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.